1979 அக்டோபர் 27]

(6) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

161. கல்லக்குடியிலுள்ள, இந்திய சிமென்டு ஆய்வு நிலையத்தின் தமிழ்நாடு மையத்திற்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள சலுகையினை நீட்டிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 3 – 9 – 1979-ஆம் தேதியிடப்பெற்ற 1399-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண். 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

162. வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையில் 5 – 10 – 1976-ஆம் தேதியன்று வெளியாகி 5 – 10 – 1976 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசு சிறப்பிதழின் பிரிவு-I. பாகம் 2 பக்கம்-1-ல் வெளியான II (1)/வ.வ.ச. அது. 306 (சி)/76-ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1 – 9 – 1979-ஆம் தேதியிடப்பெற்ற 1392-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண். 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

163. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 3 – 5 - 1979-ஆம் தேதியிடப்பெற்ற 1133-ஆம் எண். அரசாணையில், வெளியான அறிவிப்பு [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

164. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 17— 4— 1979-ஆம் தேதியிடப்பெற்ற 988-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் எண். 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.